**விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2020**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1994 மார்ச் 9 ஆந் திகதிய விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதி மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த

வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| நியமம் 01 இன் 150 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் சட்ட ரீதியான தன்மை, செயற்பாடுகளின் தன்மை, அதன் பிரதான நடவடிக்கைகளின் விபரம் என்பன கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்து வதற்குரிய வகையில் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2021 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க அடமான மற்றும் முதலீட்டு வங்கியின் மூன்று நிலையான வைப்புக்களுக்குரிய முன்னைய ஆண்டிற்கான முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 7,794,456 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க அடமான மற்றும் முதலீட்டு வங்கியின் 2020 மார்ச் மாதம் முதிர்ச்சியடைந்த ரூபா 300 மில்லியன் தொகையான நிலையான வைப்புக்களுக்குரிய வட்டி 2020 ஆம் ஆண்டில் காசு அடிப்படையில் காட்டி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற் குரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்திலிருந்து கமக்காரர் வங்கியை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கடன் பணத்தின் ஆரம்ப மீதி ரூபா 190,313,579 ஆகும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது வட்டியை கணிப்பீடு செய்யும் போது அது ரூபா 181,200,000 ஆகக் கணிப்பீடு செய்ததன் காரணமாக கடன் வட்டி ரூபா 91,125 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்கி கொள்கின்றேன். | நிதி ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்காண்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| திறைசேரி யிடமிருந்து பெற வேண்டிய கொவிசெத லொத்தர் வருமானம் | 4,710,479,333 | 4,688,745,587 | 21,733,746 | திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய மீதிகளை திறைசேரியின் மூலம் உறுதிப்படுத்து வதற்குரிய | வித்தியாசத் திற்கான காரணத்தை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |

கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் இதுவரை பதில் கிடைக்காததுடன் இந்த ஆண்டின் போது உரிய வித்தியாசம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பேன்.

### 1.5.4 கணககாய்விற்கான எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை

2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தையும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது ஒப்படைக்கப்பட்ட பின்வரும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக அந்த மீதிகளுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள எழுத்துமூல சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு - கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 7,923,175 | கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப் படுத்துதல் | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும்போது ஒப்படைக்கப்பட்ட மீதியானதுடன் உரிய கடன் மீதி தொடர்ச்சியாக இறுதிக் கணக்கில் காணப்படுகின்றது. எனவே, கொவிசெத நிதியம், பங்கு கணக்கு விவசாயிகளின் வைப்பு ஆகிய இந்த மீதிகளை இறுதிக் கணக்கு களிலிருந்து நீக்குவதற்காக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடன்பட்டோர் - பிரதி கமநல சேவை ஆணையாளர் (ஊவா) | 1,467,176 | மீதிகளை உறுதிப்படுத்தல் | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | விவசாயி களின் வைப்பு | 697,644 | விபரமான பட்டோலையும் மீதிகளை உறுதிப் படுத்தலும் | - மேற்படி - | பரீட்சித்துப் பார்த்து மீதிகளை உறுதிப் படுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | பங்கு முதல் கணக்கு | 591,965 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | கொவிசெத நிதியம் | 159,399,408 | - மேற்படி - | - மேற்படி - | மீதிகளை உறுதிப் படுத்துதல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**1.6.1 பெற வேண்டிய பணம்**

---

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சு** |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட அலுவலகம் மற்றும் விவசாயிகள் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மீதிகளுக்கு மத்தியில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரையான காலவீச்சினைக் கொண்டிருந்த ரூபா 27,502,498 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறு நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதியை அறவீடு செய்தல் சம்பந்தமாக ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவின் சிபார்சினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலதிக தீர்மானங்கள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை மாவட்டம் முழுவதும் வியாபித்துள்ள 3000 ஏக்கர் வயல் காணிகளின் சுற்றாடலுக்குச் சாதகமான நிலைபேறான விவசாய நடைமுறைகளின் Good Agriculture Practice (GAP) பிரகாரம் 2018/2019 பெரும் போகத்தில் விவசாயம் செய்தல், சர்வதேச நியமங்களுடனான நடைமுறைகள் தொடர்பாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்துதல் மற்றும் சுற்றாடலுக்குச் | பொலன்னறுவை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட அரிசிகளுக்கான (GAP) சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 5,966,000 பணம் வழங்கப்பட்டதுடன் அப்பணம் இன்று வரை செலுத்தப்படவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். இப்பணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக முறையான வேலைத் திட்டத்தினை தயாரிக்குமாறு செயற்திட்டம் தொடர்பான மேற்பார்வை நடவடிக்கைகளை | கெவிலியனுக்கு GAP சான்றிதழ் வழங்கப்பட வேண்டியதுடன் கடன் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சாதகமான நிலைபேறான விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்ளும் குறிக்கோளுடன் தோற்றுவிக்கப்பட்ட ரண் கெவிலிய சமூக தொழில் முயற்சிகள் பொதுக் கம்பனிக்கு விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 5.9 மில்லியன் வட்டியற்ற ஒரு கடன் ஒரு ஆண்டு காலப்பகுதிக்குள் செலுத்தும் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட காலப்பகுதியின் பிரகாரம் 2019 மார்ச் மாதம் வரை கெவிலியனுக்காக GAP சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் 2020 ஆம்ஆண்டின் இறுதி வரை கெவிலியனுக்கு GAP சான்றிதழ் வழங்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டம் பூர்த்தியடைய வேண்டிய காலம் முடிவடைந்து 2 ஆண்டுகள் கடந்திருந்தும் இது சம்பந்தமாக வழங்கப்பட்ட கடன் பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்கொண்ட பிரதி விவசாய பணிப்பாளருக்கு (மாகாணங்களுக்கிடையே) தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | ‘‘பிரயிம் ஹோப் லங்கா’’ எனும் பெயருடைய ஒரு தனியார் கம்பனிக்கு 2003 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 3,500,000 கடன் பணத்தில் ரூபா 860,000 தொகையானது இன்னும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. இக்கம்பனி வணிக நடவடிக்கைகளை | சட்ட ஆலோசனைகளைப் பெற்று மேலதிக நடவடிக்கைகளை எடுப்பேன். | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தியுள்ளதாகவும் கடனைப் பெற்றுக் கொண்ட நபர் மரணமடைந்துள்ளார் எனவும் நிதியத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவே மேலும் கடனைச் செலுத்தும் இயலுமை தொடர்பாக நியாயமான பரிசீலனையை மேற்கொண்டு அறவீடு செய்தல் அல்லது மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாக எதுவித முயற்சியும் இன்று வரை நிதியத்தினால் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தினையும் விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினையும் ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது அந்த இரண்டு நிதியங்களில் காணப்பட்ட வரவு மற்றும் செலவு கடன் மீதிகள் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் போது நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட சுழற்சி நிதியத்தின் ரூபா 44,255,850 தொகையான குறுங்கால கடன் மீதியை அறவீடு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,490,000 தொகையான படிகள் செலுத்தி ஓய்வு பெற்ற 10 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றும் அறவிடப்படாத குறுங்கால கடன் பணம் ரூபா 39,967,891 ஆகும். | நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்வது சம்பந்தமாக ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் சிபார்சினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலதிக தீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03(ஆ) ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | இணங்குகின்றேன். 2021 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நி.பி 877(2)(அ) பந்தி | அதிகாரச்சட்டம் அற்ற நியதிச்சட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக சுற்றறிக்கை வழங்கப்பட்டு ஒரு ஆண்டிற்குள் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரச் சட்ட வரைபுக்கு நிதி அமைச்சரின் கருத்துரைகளுடன் மீண்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதிய அமப/16/1866/728/041 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் விடயத்தை கவனித்துப் பார்ப்பதற்காக அமைச்சரவைக்கு மீண்டும் சமர்ப்பித்தலானது கணக்காய்வுத் திகதி வரையும் இடம்பெற்றிருக்கவில்லை | இந்த ஆண்டு இறுதிக்கு முன்னர் அதிகாரச் சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை முடிவுறுத்துவேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 40,157,955 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 18,195,080 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவகளில் ரூபா 21,962,875 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு மீளாய்வாண்டிற்கான அபிவிருத்திச் செலவுகள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான கண்காட்சிகள், விதை உற்பத்திகள், தேனீ பெட்டிகள் தயாரிப்பு ஆகிய 44 மூலதனச் செயற்திட்டங்களுக்காக ரூபா 916,322,319 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 14 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட செயற்திட்டங்களை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு முடியாமையை ஏற்றுக் கொள்கின்றேன். விசேடமாக 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை நிதியத்திற்கு கொவிசெத லொத்தர் வருமானம் கிடைத்திருக்காததனால் நிதியத்தை தோற்றுவித்தமைக்கான பிரதான குறிக்கோள்களை அமுல்படுத்தும் விருப்பினை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 369.8 மில்லியன் பணத்தை வழங்குமாறு 2020 திசெம்பர் 09 ஆந் திகதி நிதி அமைச்சு செயலாளரிடம் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2021 பெப்ரவரி 08 ஆந் திகதி ரூபா 100 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்தது. | கொவிசெத லொத்தர் வருமானத்தை நிதியத்தின் குறிக்கோளை முன்னிட்டு பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
| --- | --- | --- |
| விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தோற்றுவிக்கப்பட்ட 1994 மார்ச் 09 ஆந் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உறுதிப்பத்திரத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக பதவியணியினர்களை சேர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையின் காரணமாக கடனை அறவீடு செய்யும் செயல் முன்னேற்றமானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, தீர்த்து வைக்கப்படாத முற்பணங்கள் காணப்பட்டமை, அறவிடப்படாத கடன்களை பதிவழிக்க நேரிட்டமை, நிதியத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை முதலிய பலவீனங்களின் காரணமாக நிதியத்தின் நிதி மற்றும் நிருவாக முகாமைத்துவமானது திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை. | அதிகாரச்சட்டத்தை அங்கீகரித்ததன் பின்னர் பதவியணியினர்களை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். |